IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# தமிழ்த் திணைக் கற்பும் சநாதனப் பதிவிரதைத் தன்மையும்:

## (சிலப்பதிகாரத்தை முன்வைத்து)

**Tamil Thinai Karpu (urging towards family system) and Sanatan Pativrata (conjugal fidelity): (With respect to Silappadikaram)**

**க.சசிகலா,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,**
**தரமணி, சென்னை - 113.**

***Abstract:*** We know that Ilangovadikal had infused Kannagi, who is an ethno- mythological figure in the Tamil Thinai-kudi tradition, as a character who emphasizes Karpu (urging towards family system) in his work. But what exactly was the doctrine of fivefold Thinai karpu that he emphasized in the Tamil tradition? How did its material change settle in the society during the Colossian Middle Ages? What is its relevance in current use? This article presents and explains how the social acceptance of these was then and is now with reference to Silappadikaram.

***Index Terms –*** Silappadikaram**,** Thinai karpu, Kannagi, Thinai-kudi tradition.

தமிழ்த் திணைக்குடி மரபில் தொன்ம நினைவாகத் திகழும் கண்ணகி என்கிற ஒரு மானிட இருப்பை இளங்கோவடிகள் தன்னுடைய பனுவலுக்குள் கற்பை வலியுறுத்தும் ஒரு கதைப் பாத்திரமாகப் புனைந்து வைத்துள்ளார் என்பது நாம் அறிந்ததே. ஆனால் அவர் வலியுறுத்தும் ஐந்திணைக் கற்புக் கோட்பாடு மெய்யாகவே தமிழ் மரபில் என்னவாக இருந்தது? பெருஞ்சமயங்கள் கோலோச்சிய இடைக்காலத்தில் அதன் பொருண்மை மாற்றம் எவ்வாறு சமூகத்தில் நிலைபெற்றது? தற்போதைய பயன்பாட்டில் அதன் பொருண்மை என்னவாக இருக்கிறது? இவற்றின் சமூக ஏற்பு

நிலை எவ்வாறு இருந்தது, இருக்கிறது என்பதையெல்லாம் உணர்த்த வேண்டியது காலத்தின் தேவையாக இருக்கிறது.

**கற்பு எனும் சொற்பொருண்மை**

முதலில் கற்பு என்கிற சொல்லிலுள்ள கல் - கற்பு - கற்பித்தல் என்கிற பதங்கள் தமக்குத் தாமே கற்பித்துக்கொள்ளும் அகத்து உணர்வாகவே பண்டைய மரபில் ஆளப் பெற்றிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். 'அகம் என்பதன் புறமானது காட்டலாகாது' என்றே தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். அதனால் தான், அகத்து உணர்வைச் 'சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்' என்று இலக்கணம் வரையறுத்துள்ளார். அகப் பாடல்கள் முழுக்கப் பொதுப்பெயராகவே இடம்பெறும் தன்மையையும் காண்கிறோம். பொருண்மை நிலையில் கற்பு என்கிற சொல் ஆண் - பெண் கூடிவாழும் இல்லற அமைப்பையே வலியுறுத்துகிறது.

தொல்காப்பியத்தின் கற்பியலில் அமைந்துள்ள,

**''கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்**
**கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே''**[1]

என்பதில் கற்பானது இல்லற வாழ்வில் இணைத்து வைக்கும் சமூக நிறுவனத்தின் ஏற்பாடாக, ஒப்புதலோடு கொண்டு - கொடுப்பாகவே கூறப்பட்டுள்ளது. அடுத்த நூற்பாவில்,

**''கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**
**புணர்ந்து உடன்போகிய காலையான''**[2]

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, சமூக நிறுவனத்தின் ஏற்பாடின்றியும் உணர்வு ஒருமித்த ஆணும் பெண்ணும் தாமாகவே முடிவுசெய்து இல்லற வாழ்விற்குள் நுழையும் நிகழ்வும் கற்பாகவே குறிப்பிடப்பட்டுள்ளது. அகத்துணர்வின் நீட்சியாகத் தாங்களாகவே

---

1 □□□□□□□□□□□□□□, □□□□□□ □□□: 1088.
2 □□□□□, 1089.

முடிவெடுத்து உடன்போக்கில் சென்று இல்லறத்தை மேற்கொள்கிற பெண்ணின் பெற்றோரிடம், ‘அதுவே உலகத்து இயற்கை’ என்று கண்டோரும் அறவோரும் அறிவுரை சொல்வதைப் பாட்டு, தொகை நூல்களில் காண்கிறோம். ஆனால் அதற்கு அடுத்த நூற்பாவில்,

**“மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்**
**கீழோர்க்காகிய காலமும் உண்டே”**[3]

என்று கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். அதாவது ‘அந்தணர், அரசர், வணிகர்’ (நச்சினார்க்கினியர்) ஆகிய மூவர்க்கும் உரிய திருமணச் சடங்குக் கீழோர்க்கும் ஆகியது என்கிறார். திணை மரபின் களவு வாழ்வில் இல்லறத்தை நோக்கிய செவிலித்தாய், தோழி ஆகியோரின் ‘அறத்தொடு நிற்றல்’ என்கிற கூறானது, ஐயர்கள் நடத்தி வைக்கும் கரணமாகி (பெரியோர்கள் நிகழ்த்தும் மணவினை), பின்பு பார்ப்பனர்கள் நடத்தி வைக்கும் ‘வைதீகச் சடங்காகிப்’ போனதை எழுத்து மரபிலும் நடைமுறையிலும் அறிய முடிகிறது. திணை மரபில் களவுவழி வந்த இல்லறம் என்கிற கற்பு சுயதேர்வாக இருந்தமை மாற்றம் பெற்றுக் கட்டாயமாகச் சமூக நிறுவனத்தால் ஏற்பாடு செய்யும் நிலையை அடைவதை ஒருவாறு அவதானிக்க முடிகிறது. அந்த ஒழுகலாறுமே கூடச் சமூக நிலையில் மேலோர்களாகக் குறிக்கப்படும் அந்தணர், அரசர், வணிகக் குடியில் நிலைபெற்றுப் பின் திணைக்குடிக்குள் ஊடுருவியதை உய்த்துணர முடிகிறது. ஆனாலும் அதுவரையிலும்கூடக் கற்பு என்பது பொருண்மை மாற்றமின்றி இல்லற வாழ்க்கை முறையையே குறிக்கிறது.

## மலைக்கும் மடுவுக்குமான வேறுபாடு

“இளம்பூரணர் தன்னுடைய விளக்கத்தில், ‘கற்பு என்பது – மகளிர்க்கு மாந்தர் மாட்டு நிகழும் மன நிகழ்ச்சி. அதுவும் மனத்தான் உணரக் கிடந்தது’ என்று கூறுகின்றார். இளம்பூரணர் கூறுகின்ற விளக்கத்தை இன்றைய மொழியில் சொன்னால் கற்பு என்பது

[3] □□□□□, 1090.

பெண்கள் மற்றவர்களைப் பார்க்கும் போது அவர்கள் உள்ளத்தில் ஏற்படுகின்ற ஒரு உணர்ச்சி, இதனை வெளிப்படையாகக் காட்ட முடியாது என்பதாகக் கூறலாம். இதே சொல்லுக்கு அடுத்து 300 ஆண்டுகள் கழித்து உரை எழுத வந்த நச்சினார்கினியர் 'கற்பாவது: தன் கணவனைத் தெய்வமென்று உணர்வதொரு மேற்கோள்' என்று பொருள் எழுதுகிறார்.

இருவருக்கும் இடையே உள்ள வேறுபாடு மலைக்கும் மடுவுக்கும் உள்ளதாக இருக்கிறது. இந்தச் சூத்திரத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் CHASTITY என்று கூறி இன்றைய நிலையில் உள்ள (பதிவிரதைத்தன்மை - ஆசிரியர்) பொருளைச் சுட்டுகின்றார்''[4] என்கிறார் ஆய்வாளர் பொ.வேல்சாமி.

ஆனால், பாட்டு, தொகை நூல்களிலும் கற்பு எனும் சொல் முழுக்க முழுக்க இல்லறத்தை அடியொற்றியதாகவே அமைந்துள்ளது. மாறாகப் பெண்ணுடல், கருப்பையின் தேர்வுரிமை சார்ந்ததாகக் குறிக்கப் பெறவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். அதுவே பதினெண் கீழ்க்கணக்குத் தொகுப்பிலுள்ள திருக்குறளிலும் அவ்வாறே இல்லறத்தை வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது.

**''பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மைஉண் டாகப் பெறின்''[5]**

என்கிற குறளிலும்

**''சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்**

**நிறைகாக்கும் காப்பே தலை''[6]**

என்கிற குறளிலும் வலியுறுத்தப்படும் கற்பானது இல்வாழ்க்கை என்கிற அதிகாரத்தை அடுத்து, வாழ்க்கைத் துணைநலம் என்கிற பகுதியில் வைக்கப்பட்டுள்ளது. இங்குமே கற்பு என்பது இல்லறத்தை அடியொற்றியே அமைக்கப்பட்டுள்ளது. தொல்காப்பியம், பாட்டு,

4 □□.□□□□□□□□□, □□□□□ □□□□□□□□, □□ 21, 2019.
5 □□□□□ □□□:54.
6 □□□□□, 57.

தொகை நூல்கள், திருக்குறள் என அனைத்துப் பனுவல்களிலுமே கற்பு என்பது இல்லறத்தை மட்டுமே வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. ஆனால் சிலம்பில் கற்பு என்பது முதல்முறையாகத் தமிழ்த் திணை மரபிலுள்ள இல்லறத்தையும், வட வைதீக மரபிலுள்ள உடல் சார்ந்த பதிவிரதைத் தன்மையையும் இணைத்துச் சுட்டி நிற்கிறது.

**கற்பு எனும் சுயதேர்வுரிமை**

கண்ணகி, மாதவி என்கிற இரு பாத்திரங்களுமே (பிற்காலத்திய வணிக, சூத்திர) தமிழ்க் கற்பு எனும் இல்லற வேட்கையை நாடியே பயணிக்கின்றன. ஆனால் கோப்பெருந்தேவி என்கிற பாத்திரம் (அரசர் குடி) வடவைதீகப் பதிவிரதைத் தன்மையை நாடுகிறது. சமூகமாக ஏற்பாடு செய்த மணவினைகள் வரை வைதீகச் சடங்குகள் ஊடுருவியதைக் கண்ணகியின் திருமண நிகழ்வு எடுத்துக்காட்டுகிறது. சமூக நிலையில் அரசக் குடியில் வைதீக வேட்கையும் (பதிவிரதை), வணிகக் குடி, கணிகையர் குடியில் அவைதீக வேட்கையும் (இல்லறம்) பாத்திரங்களின் முடிவில் புலனாகிறது. அதாவது வட வைதீக மரபில் கற்பானது பின்வரும் மூன்று நிலைகளில் வலியுறுத்தப்படுகிறது.

1. முதல் நிலைக் கற்பு (கணவன் இறந்துவிட்டான் என்று கேட்டவுடன் இறந்துபோதல்)
2. இரண்டாம் நிலைக் கற்பு (உடன்கட்டை ஏறுதல் - சிதையிலாவது இறத்தல்)
3. மூன்றாம் நிலை (சமூக விதியான கைம்மை நோன்பு, உறுதியாக மறுமணத்தை மறுத்தல்)

இம்மூன்றில் எந்தக் கற்பு நிலையையும் கண்ணகியும், மாதவியும் எய்தவில்லை; ஆனால் கோப்பெருந்தேவி தன் கணவன் இறந்தான் என்று தெரிந்தவுடன் தானும் இறந்து, வட வைதீகத்திலுள்ள முதல் கற்பு நிலையை எய்துகிறாள். மாறாகக் கண்ணகி தன் சுய தேர்வாக நியாயம் கேட்டுப் போராடுக்கிறாள். இது பாட்டு, தொகைப்

பாடல்களிலும் காணக் கிடைக்காதது. இளங்கோவின் கொடை. மாதவி தன் சுய தேர்வாகப் புத்த சமயத்தைத் தழுவுகிறாள்; தமிழ் மரபில் கணிகையர் குலப் பெண் குழந்தை பெற்றதாக நமக்குத் தரவுகள் இல்லை; இங்கு மாதவி குழந்தை பெற்று அந்தக் குழந்தையுமே சுய தேர்வாக இல்லறத்தைத் துறந்து பவுத்த பிக்குணியாக மாறுகிறாள் என்பவை கவனிக்க வேண்டியதாக அமைகின்றன. சங்கப் பனுவல்களில் சமூக நிலையில் அரசர் குடியிலுள்ள பெண் உடன்கட்டை ஏறுதலைப் பார்க்க முடிகிறது. ஆனால் திணைக்குடியிலுள்ள எந்த வினை மேற்கொள்ளும் பெண்ணும் உடன்கட்டை ஏறியதாகத் தரவுகள் இல்லை.

**பத்தினி x பதிவிரதை: வைதீகம் x அவைதீகம்**

சிலம்பில் வரும் 'உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்துவர்' என்கிற அடிக்கருத்தில் வரும் பத்தினி எனும் சொல் பற்று + இனி (பெண்பால் விகுதி - பாடினி எனும் சொல்லில் வரும் பாடு + இனி என்பது போல) என்பது கணவனை - ஆடவனைத் தேர்ந்து பெண்ணாகிய கொடி இல்லறத்தைப் பற்றிக்கொண்டு வாழ வேண்டும் என்பதான உருவகப் பொருண்மையிலேயே அமையும். மாறாக வட வைதீக மரபிலும் இன்றைக்குத் தமிழ்ச் சமூகத்தில் நடைமுறையில் ஆளப்பெறும் பதிவிரதைத் தன்மையில் (கருப்பை சார்ந்து) அல்ல என்பதைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

திணைக்குடி மரபிலுள்ள இல்லறத்தையே கற்பு (கற்பித்துக்கொள்வது) - பத்தினி (இல்லறத்தைப் பற்றுவது) என்று கண்ணகி, மாதவிப் பாத்திரங்கள் வாயிலாக இளங்கோவடிகள் வலியுறுத்துகிறார். அதே வேளையில் தமிழ்ச் சமூகத்தின் உயர் அடுக்கில் வட வைதீகக் கற்பு (கேட்டவுடன் இறத்தல்) பயன்பாட்டுக்கு வந்துவிட்டதையும் பதிவு செய்கிறார். இடைக்காலத்தில் (பிற்காலச் சோழர்) கணிகையர் குலத்தவர் தேவரடியார்களாக மாற்றம் பெற்று நிறுவன அளவில் குறிப்பிட்ட பணிகளை மட்டுமே செய்யும்

நிலையைக் காண்கிறோம். அவர்களின் வாழ்வில் சுயம் சார்ந்து எந்தத் தேர்வுரிமையும் கிடையாது என்பதையும் பார்க்கிறோம். ஆனால் சிலப்பதிகாரத்தில் கணிகையர் குல மகளிராகிய மாதவிக்குத் தன் வாழ்வில் சுய தேர்வுரிமை இருந்ததைப் பார்க்கிறோம். அதனால் தான் அவள் பவுத்தம் தழுவிக் குலத்தொழிலை மறுக்கும் தேர்வுரிமையைச் சுயமாக எடுத்துக்கொள்கிறாள்.

அதேபோலத் தமிழ் மரபிலுள்ள கைம்மை நோன்பு என்பதும் சுய தேர்வுரிமையாகவே இருந்துள்ளமையைப் பார்க்கிறோம். மேலும் சமய, வீடுபேற்றிற்கான விதியாக எங்கும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் வட வைதீக மரபில் கைம்மை நோன்பு (வைதவ்ய கோலம்) என்பது சமய, முக்தி நிலைக்கான விதியாகப் வலியுறுத்தப்பட்டதை அறிகிறோம். இப்படியாகத் தமிழ்த் திணை மரபிலுள்ள அகக் கற்புக் கோட்பாட்டையும் (மணம்) புறத்தில் மறக்கற்புக் (வீரம்) கோட்பாட்டையும் வலியுறுத்தவே இளங்கோவடிகள் சிலம்பைப் படைத்தார் என்கிறார், க.பூரணச்சந்திரன். அதாவது, “தமிழ்த் தேசியத்திற்கு அடிப்படையாக இரண்டு முகங்கள் இருக்கின்றன. இதனையும் நன்கு ஆலோசித்து உருவாக்கியதில் அடிகளாரின் முன்நோக்கு தெரிகிறது. இந்த இரு முகங்களில் ஒன்று, ‘தமிழ்க் கற்பு’ என்னும் கோட்பாடு. இதற்குச் சங்க இலக்கிய வீரயுக அடிப்படையை நன்கு இளங்கோவடிகள் பயன்படுத்திக் கொண்டார். முன்னரே தமிழ்க்கற்பு என்னும் கோட்பாடு, ஆரியர்களின் காந்தர்வத்தை ஒத்ததாகவும், அதற்கு வேறுபட்டதாகவும் (Similar but not the same - Author) சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. ஆகவே தமிழகத்தின் தனிப்பெறும் சிறப்பாக அது ஆரிய அரசன் பிரகத்தனுக்கு உணர்த்தப்பட்டது. கற்பு என்னும் ஒழுக்க அடிப்படை, குடும்ப அமைப்பையும், ஆண்களது மேலாண்மையும் உறுதிப்படுத்தி, அதன் வாயிலாக நாட்டின் நிறுவன அமைப்பையும் காக்கும் கருவி என்பது அடிகளாருக்குப் புலப்படுகிறது.

இத்தமிழ்க் கற்பினைப் பாராட்ட வேண்டியே சேரன் செங்குட்டுவன் செயல்பட்டான். ‘தமிழ் மானம்’ காக்க வடவரைவென்று கல்கொணர்ந்தான். அக நிலையில் ‘தமிழ்க் கற்பு’ (அதுவும் ‘மறக்கற்பு’); புறநிலையில் ‘தமிழ்மானம்’ (வீரம்). சங்க இலக்கிய அமைப்பான அகம் - புறம் என்பதற்கு ஒரு காப்பிய முகம் தந்தார் இளங்கோவடிகள். இவ்வாறு அகம் - புறம் கோட்பாட்டை இருநிலைகளிலும் இணைத்ததன் வாயிலாகத் தமிழ்தேசியம் அசைக்க முடியாத உறுதிபெற்றது”[7] என்கிறார்.

**அரசர் x வணிகர்: வைதீகம் x அவைதீகம்**

இளங்கோவடிகள் பழங்குடிகளின் தொன்மத்தில் இருந்த கண்ணகியை வணிகக் குடியில் நிறுத்தித் தமிழ்க் கற்பை வலியுறுத்தியதன் தேவை ஏன் ஏற்பட்டது? என்பதும் நாம் அறிந்துகொள்ள வேண்டியதாகிறது. சிலப்பதிகாரம் என்பது சமூகத்தின் உயர் அடுக்கிலுள்ள அரசக் குடிக்கும் வணிகக் குடிக்குமான சண்டையே என்று இடதுசாரிகள் தங்கள் ஆய்வுகளின் ஊடாக அறுதியிட்டுள்ளனர். வணிகக் குடிகள் சார்ந்த ஆண்கள் வாணிபம் செய்யத் தாங்கள் பிறந்து வளர்ந்த ஊரைத் தாண்டிப் பல்வேறு பகுதிகளுக்கும் (நாடுகளுக்கும்) செல்வர். அப்போது கணிகையர் தொடர்பு என்பது இயல்பாகவே ஏற்பட்டிருக்க வேண்டும். அதைக் கண்டித்து அறம் வலியுறுத்தும் நிலையிலேயே இளங்கோவடிகள் கற்பு - பத்தினி எனும் தமிழ்த் திணை மரபின் ஒழுக்கத்தைப் பாடியிருக்க வேண்டும். ஆனாலும் இன்றைய சனநாயக யுகத்தில் கற்பு எனும் இல்லறம் ஆகட்டும், ஆடவரைப் பற்றிக்கொள்ளும் பத்தினி என்கிற கருத்தமைவுகள் ஆகட்டும் அவை ஏன் பெண்ணுக்கானதாக மட்டுமே இருக்கின்றன என்கிற கேள்வி வெடித்தெழுவது இயல்பானது. அது அன்றைய வரலாற்றுக் கட்டத்தில் சமூக வளர்ச்சி நிலையின் பிரதிபலிப்பு என்பதாக மட்டுமே

[7] க. □□□□□□□□□□□□□□, □□□□□ □□□□: □□□□□□□□□□ □□□□□□□□□, ப.19.

புரிந்துகொண்டு, சனநாயக யுகத்தின் புதிய ஆய்வுகளுக்கு முகம் கொடுப்பதே சரியானதாகும்.

கண்ணகியின் இல்லற வாழ்வில் அவளுடைய நிலையை வெளிப்படுத்தும் இடங்களாக இரண்டு இடங்களைக் குறிப்பிடலாம். கணவன் தன்னுடன் இல்லாமையால் இல்லறம் எனும் அமைப்பில் தனிப் பிரதிநிதியாக நின்று தன்னால் அறவோர் முதலியவர்களுக்கான அறங்களைச் செய்ய முடியவில்லை என்று வருந்துகிறாள். மற்றோர் இடத்தில் தேவந்தி வலியுறுத்துவதைப் புறந்தள்ளுகிறாள். இதுகுறித்துச் சிலம்பு நா.செல்வராசு அவர்கள், “கண்ணகியின் கற்பாற்றலுக்கான ஒரு கதையாகவே தேவந்தி கணவனின் முற்பிறப்புக் கதை அமைந்துள்ளது. தேவந்தியின் கணவன் பாசண்டச் சாத்தன் என்ற தெய்வம் ஆகும். மாலதி என்பவள், தன் மாற்றான் குழந்தைக்குப் பால் கொடுக்கும்போது விக்கி அது இறந்துவிட, அப்போது அவள் துயர் நீங்குமாறு பாசண்டச் சாத்தனே அவளுக்குக் குழந்தையாகத் தோன்றி உதவுகிறான். அக்குழந்தை வளர்ந்து பின், தேவந்திக்குக் கணவனாகிறான். ஒரு நாள் தன் வரலாறு பற்றி அவளிடம் கூறி மறைந்துவிடுகிறான் அவன். அவள் கணவன் பிரிவால் துன்புற்றிருந்த கண்ணகிக்குத் தெய்வீக நீர்த்துறைகளில் மூழ்கி (சோமகுண்டம் - சூரியகுண்டம்), காமக்கோட்டம் சென்று தொழுது வந்தால் நல்லது என்று கூறுகிறாள். அது கேட்ட கண்ணகி அது பீடு அன்று என்கிறாள். கற்புடை மகளிர்க்குத் தேவையில்லாதவை அவை என்பதே பொருள்”[8] என்கிறார்.

அதாவது, தமிழ்க் கற்பை வலியுறுத்தும் இளங்கோவடிகள் அதனூடாகப் பெண் தன்னுடைய நிறைகாப்பதற்காக வைதீகக் கடவுளர்களை வணங்குவதையும் கண்ணகியின் மூலம் புறந்தள்ளித் தன் அவைதீக நிலைப்பாட்டை உணர்த்துகிறார்.

---

[8] □□□□□□□□ □□. □□□□□□□□□□ (ப.ஆ □□□□□□□□□□□□□□□ (□□□□□□□□□□□ – □□□□□□□□□□□□□□ – □□□□□□□□□□ – □□□□□□□□), ப.23.

இப்படியாகக் கற்பு, பத்தினி எனும் சொற்களும் அவற்றின் பொருண்மைகளும் காலந்தோறும் மாற்றம் பெற்று, வைதீக - அவைதீகக் கருத்தியல்களுக்குள் உழன்று இன்றைக்கு முழுக்க முழுக்க வைதீகப் பெருமதவாதத் தன்மையிலேயே ஆளப் பெறுவதைப் பார்க்க முடிகிறது. வட வைதீகக் கருத்தியல் சமூகத்தின் உயர் அடுக்கில் ஊடுருவிக் கீழ்நிலை வரையிலும் பரவியுள்ளதன் வெளிப்பாடே இன்றைய கற்பின் பொருண்மையாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. தொல்காப்பியம், பாட்டு, தொகை நூல்கள், வள்ளுவம் வரை கற்பு என்பது களவில் தொடங்கியோருக்கு இல்லறத்தை வலியுறுத்தும் ஒரே பொருண்மையில் இருந்து வந்துள்ளதையும் சிலம்பில் உடல் சார்ந்த கற்பு என்பதான பொருண்மையில் வட வைதீகப் பதிவிரதைத் தன்மையில் வழங்கப்படும் தொடக்க நிலைக் கூறை அரசர், வணிகர் வாழ்க்கையில் பார்க்க முடிகிறது. அப்படிச் சிலப்பதிகாரப் பனுவல் காலத்தில் தொடக்கநிலைக் கூறாக இருந்த வைதீகக் கற்பு நிலையே மத்தியக் காலத்தில் நிலைபெற்று, இன்றைக்குச் சமூகத்தில் நிலைப்பேறாக்கம் பெற்றிருப்பதைக் காண்கிறோம். இந்த வட வைதீகப் ‘பதிவிரதை’க் கருத்தியல் திணைப் பனுவல்கள் ஆய்வு நிலையில் தமிழ்க் கற்புக் கருத்தியலுக்கு முரணானது என்பதோடு, சமூக நிலையில் பிராமணியம் விரவிப் பரவிய உயரடுக்கிலிருந்தே பின்னாளில் அனைத்து நிலைகளுக்கும் பரவியுள்ளது என்பதையும் பார்க்க முடிகிறது.

**பயன்பட்ட நூல்கள்:**


1. சிலப்பதிகாரம், ப.சரவணன் (ப.ஆ - உ.ஆ), சந்தியா பதிப்பகம், சென்னை - 29, இரண்டாம் பதிப்பு, 2015.
2. சிலப்பதிகாரம் (கவிதையியல் – பண்பாட்டியல் – மொழியியல் – அரசியல்), சிலம்பு நா. செல்வராசு (ப.ஆ), புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு, 2013.
3. தொல்காப்பியம் (பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்), பாகம் ஒன்று, கணேசயர் பதிப்பு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 113, 2007.
4. கவிதை மொழி: தகர்ப்பும் அமைப்பும், க.பூரணச்சந்திரன், சிந்தனா பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு, 1998.
5. திருக்குறள் (நாவலர் உரை), நன்செய் பதிப்பகம், திருத்துறைப்பூண்டி, முதல் பதிப்பு, 2022.